بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுுல்லாஹுுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/11/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுுமுஆ பேருரையின் சுருக்கம்**

✪ பத்ர் போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் வரலாற்றுச் சம்பவங்கள் குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்

✪ மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர் சூழலைக் கருத்தில் கொண்டு சிறப்பு துஆக்களின் பக்கம் மீண்டும் மீண்டும் கவனமூட்டல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவின் இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்பு தொடர்பாக கூறப்பட்ட வரலாற்றில் ஃபுராத் பின் ஹயான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது குறித்து கூறப்பட்டிருந்தது. அதன் மேலும் விபரங்கள் இவ்வாறு ஆகும்: அவர் கைது செய்யப்பட்டு கைதிகளுடன் இருந்தார். அவர் பத்ர் போரின் தருணத்திலும் காயமுற்று இருந்தார். இருப்பினும், எப்படியோ சிறையில் இருந்து தப்பி ஓடி விட்டிருந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரைப் பார்த்த உடனேயே, 'இப்போதாவது உன்னுடைய நடைமுறையை மாற்றிக்கொண்டு முஸ்லிமாக ஆகி விடு' என்றார்கள்.

இதனால் அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் செல்ல ஆரம்பித்தார். வழியில் ஓர் அன்சாரி சகோதரரைக் கடந்து செல்லும் போது, அவரிடம் நான் முஸ்லிமாக ஆகிவிட்டேன் என்று கூறினார். அந்த அன்சாரி சஹாபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், 'இப்பொழுது இவர் முஸ்லிமாக ஆகிவிட்டார் என்று கூறுகிறார் என்றால், இனி இவருடைய விவகாரம் இவருக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் உள்ளதாகும்' என்று கூறினார்கள். மேலும், இதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை விடுதலை செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் அனுப்பப்பட்ட போர் குழு தொடர்பான ஒரு சம்பவம் உள்ளது. அது ஹிஜ்ரீ 3 ஆண்டு ஜமாதியுல் ஆகிர் மாதத்தில் கறதா என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டதாகும். இந்த சம்பவத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் பின்வருமாறு எழுதுகின்றார்கள்: பனு ஸுுலைம் மற்றும் பனு கத்ஃபான் ஆகியோரின் தாக்குதலில் இருந்து சிறிது ஓய்வு கிடைத்தவுடன், முஸ்லிம்களுக்கு வேறு ஓர் ஆபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக ஊரை விட்டு

கிளம்ப வேண்டியது ஏற்பட்டது. அப்போதுவரை குறைஷிகள் தங்களுடைய வியாபாரத்திற்காக ஹிஜாஸின் கடற்கரை வழியாக சிரியாவுக்குச் சென்று கொண்டிருந்தனர். ஆனால், அந்தப் பகுதியினுடைய கோத்திரங்கள் முஸ்லிம்களுக்கு நண்பர்களாக ஆகி விட்டிருந்தன. அதனால் அவர்கள் அந்த வழியை விட்டு விட்டனர். இதனால் அவர்கள் ஈராக் செல்லும் நஜது வழியை மேற்கொள்ள ஆரம்பித்தனர். அதற்கு அக்கம் பக்கத்தில் முஸ்லிம்களின் பெரும் எதிரி கோத்தரங்களான ஸுலைம் மற்றும் கத்ஃஃபான் வசித்து வந்தனர்.

ஆகவே ஜமாதியுல் ஆகிர் மாதத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குறைஷிகளின் ஒரு குழு நஜத் வழியாக கடந்து செல்ல உள்ளது என்ற செய்தி கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தச் செய்தி கிடைத்தவுடனேயே ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் தம்முடைய சஹாபிகளின் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் மிகவும் சாதுர்யமாக செயல்பட்டு தம்முடைய கடமையை நிறைவேற்றினார்கள். நஜதில் உள்ள கறதா எனும் இடத்தில் அவர்களைப் பிடித்தார்கள். இந்த திடீர்த் தாக்குதலினால் பதற்றமடைந்த குறைஷிகள் தங்களுடைய செல்வங்களை விட்டுவிட்டு ஓடி விட்டனர். ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் பெரும் போர்ச்செல்வத்தைத் திரட்டியவாறு, நோக்கம் நிறைவேறியவர்களாக மதீனாவிற்குத் திரும்பி வந்தனர்.

கஅப் பின் அஷ்ரஃஃப் கொல்லப்பட்ட ஒரு சம்பவம் உள்ளது. அவன் மதீனாவின் தலைவர்களில் ஒருவனாவான். பெருமானார் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்தவர்களில் ஒருவனாவான். பிறகு அவன் குழப்பம் விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டான். அதன் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவனைக் கொல்ல கட்டளை பிறப்பித்தார்கள்.

புகாரியில் இவ்வாறு வருகிறது; ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், 'கஅபை யார் எதிர்கொள்வார்? அவன் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்கு மிகவும் துக்கத்தைத் தந்துள்ளான்' என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் எழுந்தார்கள். மேலும், 'நான் அவனைக் கொல்லுவேன்' என்று கூறினார்கள்.

அன்னார் ஒரு காரணத்தை கூறியவாறு கஅபிடம் சென்றார்கள். மேலும் (அவனிடம்) கூறினார்கள்: முஹம்மது (ஸல்) அவர்கள் எங்களிடம் சதக்கா கேட்கின்றார்கள். எங்களை கஷ்டத்தில் ஆழ்த்தி விட்டார்கள். நான் உன்னிடம் கடன் வாங்குவதற்காக வந்துள்ளேன். கஅப், 'அந்த நபரிடம் நிராசையடைந்து நீங்கள் அவரை விட்டு விடக்கூடிய அந்த நாள் வெகு தூரம் இல்லை' என்றான். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் அவரைப் பின்பற்ற ஆரம்பித்து விட்டோம். ஆகையால் எங்களால் அவரை விட முடியாது' என்றார்கள்.

அப்போது கஅப், 'அப்படியானால் உங்களுடைய பெண்கள் அல்லது மகன்களை என்னிடம் அடமானம் வையுங்கள்' என்றான். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இது சாத்தியமில்லை. எனினும்,

நாங்கள் எங்களுடைய கவசத்தை அடமானம் வைக்கிறோம்' என்றார்கள். அதை கஅப் ஏற்றுக் கொண்டான். இரவு ஆனதும் மீண்டும் கஅபினுடைய வீட்டிற்குச் சென்றார்கள். அவனை அவனுடைய வீட்டிலிருந்து வெளியே வர வைத்தார்கள். மேலும் விரைவாக செயல்பட்டு அவனைத் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கொன்று விட்டார்கள்.

இதனுடைய மேலும் விரிவான விளக்கம் புகாரியின் ஷரஹ் உம்ததுல் காரியில் இவ்வாறு உள்ளது: முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தம்முடைய தோழர்களுடன் இணைந்து கஅப் மீது தாக்கி, அவனைக் கொன்றார்கள். அப்பொழுது அவர்களின் ஒரு தோழர் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் அவர்கள் மீது வாளினுடைய நுனி பட்டது. அதனால் அவர்கள் காயமுற்றார்கள். தம் தோழர்களின் வாளின் கூர்முனை பட்டு காயமுற்றிருந்தார்கள். எனவே, அவருடைய தோழர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு வேகமாக மதீனாவிற்குக் கொண்டு வந்தனர். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் அவையை அடைந்தனர். ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் (ரலி) அவர்களின் காயத்தின் மீது தம்முடைய உமிழ் நீரை வைத்தார்கள். அதன் பிறகு அவர்களுக்கு கஷ்டம் ஏற்படவில்லை.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: கஅப் கொல்லப்பட்ட செய்தி பரவ ஆரம்பித்ததும், யூதர்களின் ஒரு குழு எங்களுடைய தலைவர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் என்று பெருமானார் (ஸல்) அவர்களிடம் முறையீடு வைத்தது. நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கஅப் உடன்படிக்கையை மீறியது, போருக்காகத் தூண்டியது, குழப்பம் விளைவித்தது, வெட்கக் கேடான விஷயங்களைப் பேசியது மற்றும் தம்மைக் கொல்வதற்காக அவன் கொலைத்திட்டம் தீட்டியது போன்ற விஷயங்களை சுருக்கமாக அவர்களுக்கு ஞாபகமூட்டினார்கள். அதனால் இந்த மக்கள் அச்சம் அடைந்து அமைதியாகி விட்டனர். அவர்களின் ஒப்புதலுடன் எதிர்காலத்திற்காக ஒரு புதிய ஒப்பந்தம் எழுதப்பட்டது. யூதர்கள் குழப்பங்கள் சச்சரவுகளில் இருந்து தவிர்ந்து இருப்போம் என்று புதிய வாக்குறுதியை வழங்கினார்கள்.

கஅப் பின் அஷ்ரஃப் கொல்லப்பட்டதைக் காரணம் கூறி யூதர்கள் முஸ்லிம்கள் மீது குற்றம் சுமத்தியதாக வரலாற்றில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால் கஅப் தனக்குக் கிடைக்க வேண்டிய தண்டனைப் பெற்றான் என்பதை அவர்களின் உள்ளங்கள் உணர்ந்து கொண்டன.

சில வரலாற்று ஆசிரியர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் சட்டவிரோதமான முறையில் இந்த கொலையை செய்ய வைத்தார்கள் என்று ஆட்சேபனை செய்கின்றார்கள். ஆனால், இது சட்டவிரோதமான கொலையாக இருக்கவில்லை என்பது தெளிவாகட்டும். ஏனெனில் கஅப் பின் அஷ்ரஃப் பெருமானார் (ஸல்) அவர்களுடன் முழுமையாக அமைதிக்கான உடன்படிக்கை செய்து கொண்டிருந்தான். முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுவது ஒருபுறம் இருக்கட்டும்! அவன் வெளியிலிருந்து எதிரிகள் தாக்குதல் தொடுக்கும் பொழுது தாம் முஸ்லிம்களுக்கு உதவி செய்வதாகவும், முஸ்லிம்களுடன் சகோதர பந்தம் வைப்பதாகவும் உடன்படிக்கை செய்திருந்தான். ஆனால் அவன்

முஸ்லிம்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்தான். மேலும் மதீனாவில் குழப்பத்திற்கான விதையை விதைத்து, போர் நெருப்பை மூட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டான். அதுமட்டுமின்றி பெருமானார் (ஸல்) அவர்களைக் கொல்ல திட்டம் வகுத்தான். அவனுடைய குற்றங்களின் தொகுப்பு எவ்வாறானதாக இருந்தது என்றால், அதன் காரணத்தினால் அவனுக்கு எதிராக இந்த தண்டனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய காலத்திலும் நாகரீகம் அடைந்தவர்கள் எனப்படும் நாடுகளிலும் கிளர்ச்சி, உடன்படிக்கையை மீறுதல், (கலகத்தை) தூண்டுதல், போர் மற்றும் சதித்திட்டங்கள் ஆகியவற்றிற்காகக் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படுகிறது. பிறகு, இங்கு என்ன ஆட்சேபனை! பிறகு இன்றைய நாட்களில் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் இதைவிட அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. அது பல ரீதியாக ஆகுமானதும் இல்லை.

இரண்டாவது கேள்வி என்னவென்றால் இரகசியமாக அவனைக் கொன்ற வழிமுறையைப் பற்றியதாகும். அரபு நாட்டில் அந்தக் காலத்தில் ஒவ்வொரு நபரும், ஒவ்வொரு கோத்திரமும் சுதந்திரமாகவும், தனிப்பட்ட அதிகாரத்தை பெற்றதாகவும் இருந்தது. இவ்வாறான சூழலில், கஅபுக்கு எதிராக வழக்கு தொடுத்து முறைப்படி கொல்வதற்கான தீர்ப்பைப் பெறுவதற்கு என எந்த நீதிமன்றதான் இருந்தது? உடன்படிக்கையின் அடிப்படையில், நபி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அனைத்துக் கருத்து வேறுபாடுகள் மற்றும் அரசியல் விவகாரங்களில் அன்னார் எந்த தீர்ப்பை பொருத்தமானதாகக் கருதுகிறார்களோ அதை வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் நாட்டின் அமைதியின் நலன் கருதி கஅபின் குழப்பம் விளைவித்தல் காரணமாக அவன் கொல்லப்படுவதற்குத் தகுதியானவன் என்று கூறினார்கள் என்றால், அன்னாருடைய தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்வதற்கு யாருக்கு என்ன உரிமை இருக்கிறது? அதுவும் குறிப்பாக, யூதர்கள் கஅபிற்கு வழங்கப்பட்ட இந்தத் தண்டனையை அவனுடைய குற்றங்களின் அடிப்படையில் அவசியமானது என்று எண்ணி அமைதியாகி விட்டார்கள்; அது குறித்து எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்பது வரலாற்றில் இருந்து நிரூபணமாகிறது.

அந்தக் காலகட்டத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் இரண்டாவது திருமணமும் நடைபெற்றது. அவர்கள் ஹஸ்ரத் ஹுனைஸ் பின் ஹுஸாஃபா எனும் ஒரு பற்றுள்ள சஹாபியின் மனைவியாக இருந்தார்கள். அவர் பத்ர் போரில் இருந்து திரும்பி வந்தபிறகு, ஒரு நோயிலிருந்து மீளமுடியாமல் காலமாகி விட்டார். ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் கணவருடைய அகால மரணத்தின் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட துக்கத்தினாலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் உள்ள தொடர்பை வலுப்படுத்துவதற்காகவும், ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் எழுத படிக்கத் தெரிந்த நபராக இருந்த சிறப்பு அம்சங்களினாலும், தப்லீக் மற்றும் தஃலீம் பணிகளை விரிவான அளவில் செய்யலாம் என்கின்ற நுட்பத்தின் அடிப்படையிலும், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ஷஅபான் மாதத்தில் அவர்களை மணமுடித்தார்கள். ஹஸ்ரத் ஹஃப்ஸா

(ரலி) அவர்களின் வஃபாத் ஹிஜ்ரீ **45** ஆவது ஆண்டில், ஏறக்குறைய **63** வயதில் நிகழ்ந்தது.

ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டின் சம்பவங்களில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் நிக்காஹ் தொடர்பாக கூறப்பட்டு விட்டது. அவர்களுக்கு ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ரமலான் மாதத்தில், அதாவது, நிக்காஹ் முடிந்த பத்தாவது மாதத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹசன் என்று பெயர் வைத்தார்கள். அவர்கள் தொடர்பாக ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள், 'என்னுடைய இந்தக் குழந்தை சய்யிது, அதாவது, தலைவராவார். ஒரு காலம் வரும், இறைவன் இவர் மூலமாக முஸ்லிம்களுடைய இரண்டு பிரிவுகளுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவான்' என்று கூறினார்கள். இந்த அடிப்படையில் அதற்கான நேரத்தில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் பாலஸ்தீனத்தின் முஸ்லிம்களுக்காக துஆவிற்காக தொடர்ந்து வலியுறுத்தியவாறு கூறினார்கள்:* நான் பல குத்பாக்களில் பாலஸ்தீனர்களுக்காக துஆ செய்யுமாறு கூறி வருகின்றேன். இன்றும் இதைப் பற்றியே கூற விரும்புகின்றேன். தொடர்ச்சியாக துஆக்கள் செய்யுங்கள். தற்பொழுதோ அநீதி உச்சத்தை அடைந்து கொண்டே செல்கின்றது. ஹமாஸுடன் போர் புரிகிறோம் என்ற பெயரில் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் கொல்லப்படுகின்றனர். எல்லாவிதமான போர் நிபந்தனைகளையும், விதிகளையும் நாகரீக உலகம் என்று அழைக்கப்படும் இது முதுகுக்குப் பின்னால் போட்டு விட்டது. அல்லாஹ் இஸ்லாமிய நாடுகளுக்கும் புரிதலை வழங்குவானாக!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், முஸ்லிம்கள் ஒன்றாக ஆக வேண்டும் என்றும், ஒன்றாக ஆகாமல் ஒவ்வொருவராக தம்மை அழித்துக் கொள்வதா அல்லது ஒன்றாக ஆகி தம்முடைய இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவதா, எஞ்சி இருப்பதா என்பதைத் (தாமே) தீர்மானித்துக் கொள்ளட்டும் என்றும் **72, 73** ஆண்டுகளுக்கு முன்பு எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

இப்பொழுதாவது இவர்கள் இந்த விஷயத்தைப் புரிந்து, ஒன்றாகி விட்டார்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

சூழல் எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால், உம்ரா செய்வதற்காக செல்லக்கூடியவர்களிடம் அங்குள்ள அரசாங்கம் விசா கொடுக்கும் போது, அங்கு சென்று பாலஸ்தீனம் அல்லது இஸ்ரேல் போர் பற்றி எதுவும் பேசக்கூடாது என்று வழிகாட்டல்கள் வழங்குகின்றது என்று எனக்கு ஒருவர் கூறினார். இது உண்மை என்றால், இஸ்லாமிய அரசாங்கத்தின் தரப்பிலிருந்து பெரும் கோழைத்தனம் வெளிப்படுத்தப்படுகின்றது.

எவ்வாறு இருப்பினும் உம்ரா என்கின்ற இறைவணக்கத்தின் உரிமையை செலுத்த வேண்டும். அந்தத் தருணத்தில் இவ்வாறான பேச்சுக்கள் எதுவும் இருப்பதில்லைதான்! இருப்பினும், அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்காக அங்கு கண்டிப்பாக துஆ செய்ய வேண்டும். அங்கு

செல்லக் கூடியவர்கள் இந்தத் துஆக்களையும் நினைவில் கொண்டார்கள் என்றால் நன்றாக இருக்கும்.

இன்றைய காலத்தில் இஸ்லாமிய அரசாங்கங்களும் குரல் எழுப்புகின்றன. ஆனால் அது மிகவும் பலவீனமான குரலாக இருக்கின்றது. சிலர் குரல் கொடுக்கின்றனர். அதைவிட சில முஸ்லிம் அல்லாத மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்கங்கள் உரத்த குரல் எழுப்பியுள்ளன. அல்லாஹ் முஸ்லிம்களிடமும் தைரியத்தையும், நுட்பமான ஞானத்தையும் உருவாக்குவானாக. UN உடைய ஜென்ரல் செக்ரட்டரியும் நன்றாக பேசுகின்றார். இன்றைய நாட்களில் அவர் மிகவும் நன்றாக பேசுகின்றார். ஆனால் அவருடைய குரலுக்கு எந்த முக்கியத்துவம் இல்லை என்று தெரிகின்றது.

இந்தப் போர் மேலும் விரிவடைந்தது என்றால், உலகப் போரின் வடிவத்தைப் பெற்று விட்டது என்றால், அதனுடைய முடிவுக்குப் பிறகு UN வும் முடிந்து விடும். எல்லாம் வல்ல அல்லாஹ் உலகத்திற்குப் புரிதலை வழங்குவானாக! தற்பொழுது உலகம் தன்னுடைய அழிவை மிக அருகில் கொண்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த அழிவிற்குப் பிறகு எந்த மக்கள் எல்லாம் எஞ்சி இருப்பார்களோ, அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் இறைவன் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவர்களாக ஆவார்களாக! அவன் பக்கம் திரும்பக் கூடியவர்களாக ஆவார்களாக! எவ்வாறு இருப்பினும் இது தொடர்பாக நாம் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் உலகத்தின் மீது கருணை காட்டுவானாக! (ஆமீன்)

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)